## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.60/2021

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமமூர்த்தி | மதம் | : இந்து |
| த/பெ | : ராமகிருஷ்ணம நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 66 | கிராமம் | : நரசிம்ம நாயுடு கண்டிகை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**25.02.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பிரதிவாதி எனது அண்ணன் என்றால் சரிதான். நானும் என் அண்ணனும் சேர்ந்து N.N. கண்டிகை கிராமத்தில் புல எண்.177/12Aல் 14 செண்ட் நிலத்தை 31.01.1994ம் தேதியிட்டு கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். அந்த 14 செண்டிற்கு தெற்கேயும் மேற்கேயும் சாலை உள்ளது என்றால் மேற்கே சாலை இருக்கிறது. தெற்கே ஆரம்பத்தில் சாலை இல்லை. எங்களது கிரைய ஆவணத்தில் நான்கு எல்லை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் பிராதுடன் மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 7 வரைபடம் நான் பிராதுடன் தாக்கல் செய்த வரைபடம் என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ 7 வரைபடத்திலேயே வீட்டிற்கு தெற்கே கடை காட்டியுள்ளேன் என்றால் சரிதான். எத்தனை கடை கட்டியுள்ளேன் என்றால் 4 கடை கட்டியுள்ளேன். அந்த கடைக்கு வழியே நல்லாட்டூர் சாலை என்றால் சரிதான். நல்லாட்டூர் சாலை கடைக்கு தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். கடை வடக்கு தெற்கு எவ்வளவு அடிக்கு கட்டியுள்ளேன் என்றால் 36 அடிக்கு 33 அடி கட்டியுள்ளேன். எனது கடைக்கு அடுத்து பிரதிவாதி கடை கட்டியுள்ளார் என்றால் ஆமாம். A,B,C,G எனக்கும் C,G,E மற்றொரு பக்கம் குறிப்பிடப்படாத பகுதி பிரதிவாதிக்கும் என்றால் சரிதான். 3 ஏர்ஸ் அதாவது 8 செண்ட் எனக்கும் 6 செண்ட் எனது அண்ணனுக்கும் உள்ளது என்றால் ஒரு செண்ட் அதாவது 12 அடிக்கு 36 அடி

வழிக்கு விடப்பட்டுள்ளது.

3. பட்டா எண்.1561ல் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். நாங்கள் கிரையம் வாங்கியது மொத்தம் 5 1/2 ஏர்ஸ் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 பட்டாவில் மொத்தம் 3 ஏர்ஸ் எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு ஒதுக்கிய சொத்திற்கு பட்டா கொடுத்தது போல அவருக்கு ஒதுக்கிய சொத்திற்கு அவர் பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வழக்கிற்கு முன்போ பின்போ பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா புல வரைபடத்தை பார்த்தேனா என்றால் தெரியாது. பொது வழி என்று நான் சொல்லும் 12 அடிக்கு 36 அடியின் புல எண் என்ன என்றால் 77/12 ஆகும். 12 அடிக்கு 36 அடியில் எனக்கும் என் அண்ணனுக்கும் பொது கூட்டு பட்டாவோ அல்லது புல வரைபடமோ கொடுத்துள்ளார்களா என்றால் 1999ல் பெங்களூர் சென்றுவிட்டு 2021ல்தான் ஊருக்கே வந்தேன். UDRல் பட்டா கொடுத்துவிட்டார்கள். எனக்கு அது தெரியாது.

4. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பி அட்டவணை சொத்து புல வரைபடம் வருவாய் ஆவணங்களில் பொது வழியாக உள்ளதா என்பதை சரிபார்க்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்து விட்டேன் என்றால் சரி பார்த்தேன். பிரதிவாதியின் 2 1/2 ஏர்ஸ்க்கான பட்டாவை பார்த்தேனா என்றால் தெரியாது. பி அட்டவணைக்கான புல வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. புல வரைபடத்தில் பொது வழி இல்லை என்பதால்தான் நான் வேண்டுமென்றே புல வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டோமா அல்லது பதிவு செய்த ஆவணம் மூலம் பிரித்து கொண்டோமா என்றால் பாக பத்திரம் போடவில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)